**I Additional District Court, Thoothukudi.**

**<u>O.S.No.233/2024 நாள் : 29.06.2026</u>**

**<u>வா.சா.1– திரு.முத்துகிருஷ்ணன்.</u>**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

அப்பனேரி கிராமம் புல எண் 302–ன் மொத்த விஸ்தீரணம் சுமார் 6 ஏக்கருக்கு மேல் இருக்கும். புல எண் 302/6ன் மொத்த விஸ்தீரணம் வழக்குரைப்படி 1.40 ஏக்கர். அந்த சொத்திற்கு தாவா தாக்கல் செய்த தேதியில் தாவா சொத்தின் ஒரு செண்ட் மதிப்பு சுமார் ரூபாய் 2 லட்சம் இருக்கும். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கேட்டிருக்கிறோம். 1.40 ஏக்கர் சொத்தை 23 நபர்களுக்கு விற்றிருக்கிறேன். 23 நபர்களின் பிரதிநிதித்துவம் பெற்ற நபராக நான் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் சார்பாகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதற்காக நான் நீதிமன்றத்தில் இடைக்கால மனு மூலமாக அனுமதி பெற்றேனா என்றால் எனக்குத் தெரியாது. 1, 2 வாதிகள் என்னிடமிருந்து கிரையம் பெற்ற நபர்கள் என்றால் சரிதான். அவர்களைத் தவிர என்னிடம் கிரையம் பெற்ற 21 நபர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை.

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.